THE COVAI MAIL

RNI: TNBIL/2014/55455. ENGLISH & TAMIL WEEKLY NEWSPAPER Postal Reg.No: CB/123/2021-23.

Vol No. : 9 Issue No. : 20 www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL Every Sunday, Aug 14-20, 2022, 4 Pages, Rs.5/- Annual subscription - Rs.260/-

SPAR Hypermarket

SPAR

FREEDOM BONUS 50%* CASH BACK

Valid till 15th August

Applicable only for Landmark Rewards Members

On purchase of ₹1499 get coupons worth ₹750*

(*₹250 x 3 Coupons redeemable on purchase of ₹1500 each)

SPAR PRICE ₹99

பச்சை ஜெஸ்ப்ரி கிவி 3 உள்ள பேக் / ஷிம்லா ஆப்பிள் / தேங்காய் 5 பீஸ்
MRP: ₹119 onwards

BUY ANY 2 GET 1 FREE

டாடா சம்பன்ன் முழு வகைகள்
MRP: ₹120

SPAR PRICE ₹169

கோல்டு வின்னர் எண்ணெய் 1லி
MRP: ₹188

SPAR PRICE ₹185

ஸ்பார் ஆட்டா 5 கிகி
MRP: ₹265

SPAR PRICE ₹1129

எம்பி பொன்னி புழுங்கலரிசி 25 கிகி + கோல்டு வின்னர் எண்ணெய் 1லி + ஸ்பார் கொடுமை மாவு 1 கிகி + பாப்புலர் சர்க்கரை 1 கிகி + ஸ்பார் உப்பு 1 கிகி
MRP: ₹1823

SPAR PRICE ₹999

பெரிய வஞ்சரம் மீன் தலை இல்லாமல் 1 கிகி
Market Price: ₹1649

SPAR PRICE ₹469

ஹெரிடேஜ் பசு நெய் 1லி
MRP: ₹630

SPAR PRICE ₹319

ஸ்பார் தேர்ந்தெடுக்கப்பட்ட குறைந்த விலை பாதாம் 500 கி
MRP: ₹420

SPAR PRICE ₹1199

ரெட்டை கிழி பொன்னி புழுங்கலரிசி 25 கிகி
MRP: ₹1500

SAVE ₹22

மேக்கி நூடுல்ஸ் 560கி
MRP: ₹109

33% OFF

உறைந்த தேர்ந்தெடுக்கப்பட்ட வகைகள்
(Mccains / ITC / Keventer / Yummiez Veg & Non Veg)

33% OFF

கோகா கோலா / ஸ்ப்ரைட் / ∴பாண்டா 2 லி / தம்ஸ் அப் / மிரிண்டா 1 லி
MRP: ₹95 onwards

பிரிட்டானியா நியுட்ரி சாய்ஸ் டைஜெஸ்டிவ் / மாரீ கோல்டு 1 கிக
MRP: ₹140 onwards

BUY 2 GET 1 FREE

கேட்பரி ஹோம் ட்ரீட்
(Dairy Milk / Five Star / Dairy Milk Silk / Perk / Fuse / Gems)
MRP: ₹100 onwards

BUY 1 GET 1 FREE

லேஸ் / டொரிட்டோஸ் 80 கி முதல்
MRP: ₹50

BUY 1 GET 1 FREE

ஸ்பார் உறைந்த பட்டாணி / இனிப்பு சோளம் 500 கி
MRP: ₹90 onwards

SAVE ₹90

போர்ன்விட்டா 5 ஸ்டார் மேஜிக் / சக்தி சூப்பர் சேவர் பேக் 750 கி
MRP: ₹310 onwards

BUY 1 GET 1 FREE

டியோடோரண்ட் தேர்ந்தெடுக்கப்பட்ட வகைகள்

ஷாம்பூ தேர்ந்தெடுக்கப்பட்ட வகைகள் 650 மிலி

SAVE ₹41

ஹார்பிக் பவர் / லைஸால் டிஸ்இன்.ஃபெக்டென்ட் ∴ப்லோர் கிளீனர் 1 லி
MRP: ₹205

SAVE ₹100

பியர்ஸ் ப்யூர் & ஜென்டல் / டவ் சோப் 125கி x 3
MRP: ₹252 onwards

SAVE ₹105

ஸ்பார் ஹோம் க்ளீனிங் கிட்
MRP: ₹175

SAVE ₹140

சர்.ப் எக்ஸெல் ஏரியல் மேட்டிக் 2/
(Front / Top Load)
MRP: ₹430 onwards

SAVE ₹425

மமி போகோ பேண்ட்ஸ் **(S/M/L/XL)**
MRP: ₹1249

SPAR PRICE ₹899

FREE Fleece Blanket worth ₹249

மடிக்கக்கூடிய மெத்தை
MRP: ₹2999

SPAR PRICE ₹999

FREE Puffy worth ₹399

பீன் பேக் **XXL**
MRP: ₹2999

50% OFF

ப்ரெஸ்டீஜ் மார்வெல் ப்ளஸ் / மேஜிக் **(2/3/4 Gas Stoves)**
MRP: ₹5845 onwards

50% OFF

ப்ரெஸ்டீஜ் எலெக்ட்ரிக் ஸ்டீல் கெட்டல் 1.5 லி
MRP: ₹1445

50% OFF

டாய்ஸோன் பேபி ஸ்டார் ரைட் ஆன்
MRP: ₹1799

60% OFF

3 லி + 2 லி குக்கர் காம்பி
MRP: ₹1779

60% OFF

ஸ்பின் மோப்
MRP: ₹1299/1499

65% OFF

யூனிநாக்ஸ் எக்ஸாரோ காப்பிடப்பட்ட ஸ்டீல் கேசரோல் 3 உள்ள செட
MRP: ₹2090

65% OFF

விஜபி கோரல் 4 வீல் ஹார்ட் மீடியம் ஸ்ட்ராலி
MRP: ₹7200

BUY 1 GET 3 FREE

பிராண்டெட் அச்சிடப்பட்ட டபுள் பெட்ஷீட்கள்
MRP: ₹1299 onwards

BUY 1 GET 2 FREE

மெலமைன் சுத்திருந்த பாத்திரம் வகைகள் **(Plates/Bowls/Handi/Bucket/Kadhai)**
MRP: ₹99 onwards

SPAR PRICE ₹499

லாரா போரோஸில் 12 பீஸ் டின்னர் செட்
On shopping of ₹499
MRP: ₹1445

SPAR PRICE ₹999

பியாங்கா டபுள் பெட் கம்.ர்டர்
On shopping of ₹999
MRP: ₹3999

FREEDOM BONUS 50%* CASH BACK

On purchase of ₹1499 get coupons worth ₹750*

(*₹250 x 3 Coupons redeemable on purchase of ₹1500 each)

*T&C apply

SHOP ONLINE!

sparindia.com

Your Hypermarket at Home!

2 HOURS DELIVERY

Download SPAR App

STORES Call & Order

புருக்.ர்பீல்ட்ஸ், லோயர் கிரவுண்ட் ப்ளோர், ஆர்.எஸ். புரம் **(7305029453)**

ப்ரொசோன் மால், கிரவுண்ட் ப்ளோர், சிவானந்தபுரம் **(7339331510)**

SPAR Hypermarket

Paytm CASHBACK Paytm Wallet Paytm Postpaid Up to ₹200 Instant cashback

விழுப்புரத்தில் விரைவில்

*Conditions apply, Offer period as mentioned above or till stocks last. Prices are subject to change based on market conditions. The promotional offer of 50% cashback on ₹1499 is applicable only for Landmark Reward Members. Cashback of 50% will be issued as 3 unique SMS coupons worth ₹250 each sent on 17 Aug, 1 Sep & 16 Sep. Each coupon is redeemable on a min. bill of ₹1500 except on Liquor, Tobacco, Baby products, Oil & Ghee. Quantity restrictions applicable at the discretion of the SPAR Management. The product range in each area indicative only and may not be the same as the actual product Savings are calculated on the basis of MRP/Estimated Market Price. Commodity prices are subject to change based on market conditions. Offer valid till 15th August 2022.

முற்பிறவி நினைவிற்கு வந்தால் என்னாகும்?

தி கோவை மெயில்

சத்குரு: பழைய நினைவுகள் இருக்கக்கூடாது என்றுதான் இந்த வாழ்க்கையை இயற்கை உங்களுக்கு கொடுத்திருக்கிறது. இத்தகைய பாதுகாப்பு சுவரே உங்களுக்கு பழைய நினைவுகள் வரக்கூடாது என்று தான் அமைக்கப்பட்டிருக்கிறது. அப்படி நினைவு வருமானால், நீங்கள் இப்போது இருக்கும் நிலையைவிட அதிகமான குழப்பத்தில் சிக்கிக் கொள்வீர்கள். இவ்வுலகில் பத்து, இருபது, முப்பது, அறுபது ஆண்டுகள் வாழ்கிறீர்கள். இந்த வருடங்களில் ஏற்பட்ட நினைவுகளே உங்களுக்கு பெரிய போராட்டத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. உண்மைதானே?

இந்த சில ஆண்டு கால நினைவுகளுக்கே இவ்வளவு போராட்டமாக இருக்கிறது என்றால், இன்னும் முற்பிறவி நினைவுகள் வருமானால், உங்களுக்குள் எத்தகைய குழப்பமும் போராட்டமும் நிகழும் என்று உங்களுக்குத் தெரியுமா? இந்தப் பிறவியில் உங்களுக்கு இருக்கும் உறவுகளுடனேயே உங்களுக்குப் பெரும் போராட்டமாக இருக்கிறது. நேற்று நடந்ததையும் மறக்க முடியவில்லை, நாளை என்ன நடக்கப்போகிறதோ என்பதையும் விட முடியவில்லை. இந்தப் போராட்டங்கள் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கின்றன.

உங்களுக்கு முற்பிறவி ஞாபகங்கள் வந்துவிட்டது என்று வைத்துக் கொள்வோம். இன்று உங்களுடைய அன்பு மகனாக இருப்பவர் முற்பிறவியில் உங்கள் பக்கத்து வீட்டுக்காரரின் செல்ல நாய்க்குட்டியாக இருந்தார் என்று உங்களுக்குத் தெரிய வருகிறது. இது நிஜம் என்று சொல்லவில்லை, அப்படி வைத்துக் கொள்ளுங்கள் என்று தான் சொல்கிறேன் (சிரிக்கிறார்). எப்படியும் இன்று மனிதரைவிட நாய்களுக்குத் தான் வாழ்க்கை நன்றாக இருக்கிறது. அப்படித்தானே?

இது உங்களுக்கும் உங்கள் பக்கத்து வீட்டுக்காரருக்கும் எத்தகைய பூதாகாரமான பிரச்சனைகளை உருவாக்கும் என்று தெரியுமா? (சிரிக்கிறார்) அந்த நாயின் வாழ்க்கையிலும் கூட இது சிக்கலை ஏற்படுத்தும். இதனால் யாருக்கும் எவ்வித நல்லதும் நடக்க வாய்ப்பில்லைதானே? அவர் இதற்கு முன்னர் உங்கள் மனைவியாக இருந்திருந்தாலும், தந்தையாக இருந்திருந்தாலும், உயிர் நண்பராகவே இருந்திருந்தாலும் கூட இப்போது அது உங்களுக்கு ஒரு பிரச்சினையாக இருந்திருக்காது என்றால் இதெல்லாம் உங்களுக்குத் தெரிவது ஒன்றும் தவறல்ல. ஆனால், உங்களுடையது என்று நினைக்கக்கூடிய ஒவ்வொன்றுக்கும் நீங்கள் உணர்ச்சி வயப்படுபவர் என்றால், இது நிச்சயம் பிரச்சனை தான்.

பொதுவாகவே மக்கள் 'என்னுடையது' என்று எதைப்பற்றி நினைக்கிறார்களோ அதனுடன் தான் உணர்ச்சி அளவில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வார்கள். இப்போது நீங்கள் உங்கள் அப்பாவையோ, அம்மாவையோ அல்லது உடன் பிறந்த இரட்டைச் சகோதரனையோ, சகோதரியையோ பிறப்பில் இருந்தே பார்த்ததில்லை என்று வைத்துக் கொள்வோம்.

இன்று நான் ஒருவரைக் காட்டி, இதோ பாருங்கள், இவர்தான் உங்கள் அம்மா என்று சொல்கிறேன். நீங்கள் அவரை இன்று வரை பார்த்ததில்லை. அவருடன் இன்று வரை உங்களுக்கு எவ்விதத் தொடர்பும் இருந்ததில்லை. அப்படியிருந்தாலும் கூட, இவர்தான் உங்கள் அம்மா என்று ஒருவர் சொல்லிவிட்டால் போதும், அவரைப் பார்த்தவுடன் உங்களுக்கு அப்படியே உணர்ச்சிகள் வெடித்துக் கிளம்பும். அது எங்கிருந்து வருகிறது?

அவருடன் நீங்கள் இதுவரை பழகவில்லை. அவருடன் வாழ்ந்ததில்லை. ஆனால் யாரோ ஒருவர், "இவர்தான் உங்கள் அம்மா" என்று சொன்னவுடன் நீங்கள் உணர்ச்சிவயப்பட்டுப் போகிறீர்கள். அதாவது அவர் உங்களுக்குச் சொந்தம் என்று சொல்லிவிட்டார். அப்படித்தானே? "என்னுடையது" என்று நீங்கள் எப்போது நினைக்கிறீர்களோ, அப்போது அவற்றின் மீது உங்களுக்கு உணர்ச்சிகள் வெடித்துக்கொண்டு வெளிவருகின்றன.

உங்களுக்கு 'உங்களுடையதாக' இருந்தால் மட்டும் தான் உணர்வுகளும் ஒட்டுதலும் இருக்க முடியும் என்ற பிரச்சினை இருக்கிறது என்றால், உங்கள் ஆசையை இன்னும் சற்று அதிகமாக்கி, எல்லாவற்றையுமே உங்களுடையதாக்கிக் கொள்ளுங்கள். பேராசை என்று ஆன பிறகு, அதில் கஞ்சத்தனம் எதற்கு? பேராசையை அதன் உச்சத்திற்கே எடுத்துச் சென்று, எல்லோரையுமே உங்களுடையதாக்கிக் கொள்ளுங்கள். அதில் என்ன பிரச்சினை? அதை யாராவது தடுப்பார்களா என்ன? (சிரிக்கிறார்).

ஒன்று எல்லோருமே என்னுடையவர்கள் என்ற உச்சப் பேராசையில் இருங்கள், அல்லது, யாருமே என்னுடையவர்கள் அல்ல என்று விடுங்கள். ஆனால் "இதுதான் என்னுடையது, அது என்னுடையது அல்ல" என்றால் அது நிச்சயம் பிரச்சினைதான்.

உங்களுடையது என்று நினைக்கக்கூடிய ஒவ்வொன்றுக்கும் நீங்கள் உணர்ச்சி வயப்படுபவர் என்றால், இது நிச்சயம் பிரச்சனை தான். பொதுவாகவே மக்கள் 'என்னுடையது' என்று எதைப்பற்றி நினைக்கிறார்களோ அதனுடன் தான் உணர்ச்சி அளவில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வார்கள்.



பி.எஸ்.ஜி. கூடைப்பந்து போட்டி

இந்திய கப்பல் படை அணி வெற்றி

பி.எஸ்.ஜி. கூடைப்பந்து போட்டியில் இந்திய கப்பல் படை அணியினருக்கு கோப்பையை வழங்குகிறார் கோவை மாவட்ட ஆட்சியர் சமீரன். அருகில் பி.எஸ்.ஜி கல்வி நிறுவனங்களின் நிர்வாக அறங்காவலர் கோபால கிருஷ்ணன்.

கூடைப்பந்து போட்டியில் இந்திய கப்பல் படை அணி, ரெஸ்ட் ஆஃப் தமிழ்நாடு அணி விளையாடிய போது.

தி கோவை மெயில்

56வது பி.எஸ்.ஜி. கூடைப்பந்து போட்டியில் இந்திய கப்பல் படை அணி முதலிடத்தை பிடித்து கோப்பையை வென்றது.

கோவை, பி.எஸ்.ஜி ஸ்போர்ட்ஸ் கிளப் சார்பில் 56 வது ஆண்கள் அகில இந்திய அளவிலான கூடைப்பந்து போட்டிகள் கோவையில் ஆகஸ்ட் 3 ம் தேதி துவங்கி 7 ம் தேதி வரை ஐந்து நாட்களுக்கு பி.எஸ்.ஜி டெக் உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்றது.

இதன் இறுதிப் போட்டி ஆகஸ்ட் 7 ஆம் தேதி நடைபெற்றது. இதில் இந்திய கப்பல் படை அணியை எதிர்த்து ரெஸ்ட் ஆஃப் தமிழ்நாடு அணி விளையாடியது. இந்திய கப்பல் படை அணி 108 - 85 என்ற புள்ளிக் கணக்கில் வெற்றிபெற்று பி.எஸ்.ஜி. கோப்பையை தட்டிச்சென்றது.

வெற்றிபெற்ற அணிகளுக்கு பரிசளிப்பு விழா நடைபெற்றது. இதில் கோவை மாவட்ட ஆட்சித்தலைவர் சமீரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு முதல் பரிசு பெற்ற அணிக்கு ரூ.1 லட்சம் மற்றும் பி.எஸ்.ஜி கோப்பை, இரண்டாம் இடம் பெற்ற ரெஸ்ட் ஆஃப் தமிழ்நாடு அணிக்கு ரூ.50,000 மற்றும் கோப்பையை வழங்கினார்.

விழாவிற்கு பி.எஸ்.ஜி கல்வி நிறுவனங்களின் நிர்வாக அறங்காவலர் கோபால கிருஷ்ணன் முன்னிலை வகித்தார். சி.ஆர்.ஐ பம்ப் நிறுவனங்களின் இணை நிர்வாக இயக்குனரும், கோவை மாவட்ட கூடைப்பந்து கழக தலைவருமான செல்வராஜ் கௌரவ விருந்தினராக கலந்து கொண்டார்.

இந்துஸ்தான் கல்லூரியில் வரவேற்பு விழா

தி கோவை மெயில்

இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரியில் இளங்கலை முதலாமாண்டு மாணவர்களுக்கான துவக்க விழா நடைபெற்றது. இந்நிகழ்விற்கு ரூட்ஸ் இண்டஸ்ட்ரீஸ் இந்தியா லிமிடெட்டின் இயக்குனர் கவிதாசன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார். மேலும், இந்நிகழ்ச்சியில் இந்துஸ்தான் கல்வி மற்றும் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் சரஸ்வதி கண்ணையன், செயலாளர் பிரியா சதீஸ்பிரபு, இந்துஸ்தான் கல்வி நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரி கருணாகரன், முதல்வர் பொன்னுசாமி, மற்றும் துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள் மாணவ மாணவியர்கள் மற்றும் பெற்றோர்கள் பலர் கலந்துகொண்டனர்.

கே.பி.ஆர் கல்லூரியில் மாணவர் புதுமுக வகுப்பு

தி கோவை மெயில்

கே.பி.ஆர் கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரியின் வணிகவியல் துறை சார்பில் மாணவர் புதுமுக வகுப்பு நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு கல்லூரி முதல்வர் பாலுசாமி தலைமை வகித்தார். வணிகவியல் துறைப்புல முதன்மையர் குமுதாதேவி வாழ்த்துரை வழங்கினார். வணிகவியல் துறைத் தலைவர் சாந்தி வரவேற்புரை வழங்கினார். நிகழ்விற்கு கோவை மாவட்டம் துணை ஆட்சியர் செல்வன சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசுகையில்: வாழ்க்கையில் வெற்றி பெற எவ்வாறு தன்னை சீர்மை படுத்திக் கொள்ள வேண்டும் என்பதனை தன் அனுபவங்களைக் கொண்டு எடுத்துரைத்தார்.

போட்டித் தேர்வுகளுக்கு தயாராவது எப்படி?, தொழில் வாய்ப்புகளைத் தெரிவு செய்வதன் நன்மைகள் மற்றும் முக்கியத்துவம் குறித்து விளக்கினார்.

மேலும், நேற்று, இன்று, நாளை என அன்றாட நிகழ்வுகளை நாளும் செய்தித்தாள் வழி அறிந்து கொள்ள, மாணவர்கள் செய்தித்தாள் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளக் கூறினார். விரும்பிய பாடம் கிடைக்கவில்லையெனில், கிடைத்த பாடத்தை விரும்பிப் படிக்க தன்னைத் தயார்படுத்திக் கொள்ளக் கூறினார். இந்நிகழ்வில் துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் 500 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

76 சதுர அடியில் கேக் தயாரித்த ஸ்ரீ ராமகிருஷ்ணா மாணவர்கள்!

தி கோவை மெயில்

கோவை நவஇந்தியாவில் உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 76 வது சுதந்திர தினத்தை வரவேற்கும் விதமாக 76 சதுர அடியில் பிரம்மாண்டமான கேக் காட்சிப்படுத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் எஸ்.என்.ஆர் சன்ஸ் அறக்கட்டளையின் முதன்மை இயக்க அலுவலர் சுவாதி ரோகித் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். கல்லூரியின் முதல்வர் மற்றும் செயலர் சிவக்குமார் இதில் பங்கேற்றார். கல்லூரியில் காட்சிப்படுத்தப்பட்ட இந்த கேக்கினை ஸ்டேன்ஸ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப் பள்ளியின் மாணவிகள் பார்வையிட்டனர். இந்த கேக்கை கல்லூரியின் பி.எஸ்சி உணவு மற்றும் விடுதி மேலாண்மை துறை மாணவ, மாணவியர்கள் தயாரித்தனர்.

இதன் தயாரிப்பு குறித்து கல்லூரியின் துணை முதல்வரும், துறை தலைவருமான தீனா கூறுகையில்: சிறுதானிய வகைகளான கேழ்வரகு, சாமை, திணை, சோளம், குதிரை வாலி, ராகி, கம்பு

76 சதுர அடியில் தயாரிக்கப்பட்ட சிறுதானிய கேக், அப்துல் கலாம் புக் ஆஃப் ரெகார்ட்ஸில் இடம்பெற்றதற்கான சான்றிதழை எஸ்.என்.ஆர் சன்ஸ் அறக்கட்டளையின் முதன்மை இயக்க அலுவலர் சுவாதி ரோஹித், கல்லூரியின் முதல்வர் சிவக்குமாரிடம் வழங்குகிறார். அருகில் கல்லூரியின் துணை முதல்வர் தீனா.

ஆகியவற்றை கொண்டு, 250 கிலோ எடையில் 48 மணி நேரத்தில் கேக் தயார் செய்யப்பட்டுள்ளது. 2022 - 2023 ஆம் ஆண்டு சிறுதானியங்களின் ஆண்டு என்பதால் அதில் உள்ள நன்மைகளை எடுத்துரைத்து, விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக ஏழு வகையான சிறுதானியங்களின் மூலம் இதனை வடிவமைத்துள்ளோம். இதில் பால் மற்றும் வெண்ணெய் சேர்க்கப்படாமல், வெஜிடபிள் ஆயில், முட்டை மற்றும் நாட்டு சர்க்கரை சேர்க்கப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளது. சிறுதானியங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட உலகின் மிகப்பெரிய 'சிறுதானிய கேக்' என்பதால் அப்துல் கலாம் புக் ஆப் ரெக்கார்ட்ஸில் மாணவர்களின் சாதனை இடம் பிடித்துள்ளது எனக் கூறினார்.

ஆர்.வி.கலை கல்லூரியில் பட்டமளிப்பு விழா

தி கோவை மெயில்

டாக்டர்.ஆர்.வி.கலை அறிவியல் கல்லூரியில் 11 வது பட்டமளிப்பு விழா நடைபெற்றது. இவ்விழாவில் கல்லூரி முதல்வர் ரூபா அனைவரையும் வரவேற்று கல்லூரி அறிக்கை வாசித்தார்.

கல்லூரியின் செயலர் சுந்தர் வாழ்த்துரை வழங்கினார். கோவை, பாரதியார் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் காளிராஜ் பட்டமளிப்பு விழா உரையாற்றினார். அவர் பேசிய உரையில், மாணவர்கள் கல்லூரியில் பயின்று பட்டம் பெறுவதோடு மட்டும் அவர்களுடைய கல்வி நின்று விடுவதில்லை. வாழ்நாள் முழுவதும் கல்வி கற்றுக் கொண்டே இருக்க வேண்டும். கால மாற்றத்தின் காரணமாக விஞ்ஞான வளர்ச்சியிலும், மென்பொருள் துறையிலும், தொழில்நுட்ப வளர்ச்சியிலும் வியக்கும் படியான பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

தொழில் சார்ந்த நிறுவனங்கள் பல பெருகி உள்ள போட்டிகள் நிறைந்த இந்த உலகத்தில் நாம் நம்மை நிலை நிறுத்திக் கொள்வது அவசியமாகிறது. மாணவர்கள் தனக்கான துறையை தேர்ந்தெடுத்து வேலை வாய்ப்பைப் பெற்று வாழ்க்கையில் முன்னேறுவது அவசியம். அதற்காக தம் தனித்துவமான திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.



பட்டமளிப்பு விழாவில் பாரதியார் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் காளிராஜ் மாணவிக்கு பட்டம் வழங்குகிறார். உடன், (வலமிருந்து) கல்லூரியின் செயலர் சுந்தர், முதல்வர் ரூபா.

இளம் தலைமுறையினர் பெற்றோர்களையும், கல்வி கற்றுக் கொடுத்த ஆசிரியர்களையும் மதித்து அவர்கள் அறிவுரையை ஏற்று நடத்தல் வேண்டும். இதனால் வாழ்க்கை வளமடையும் என்று மாணவர்களுக்கு பல்வேறு கருத்துக்களை எடுத்துரைத்தார்.

இதனைத் தொடர்ந்து 2016 2019 மற்றும் 2017-2020 ஆம் கல்வியாண்டில் வணிகவியல், கணினி அறிவியல், உயிர் தொழில் நுட்பவியல், கணிதவியல் துறையில் இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்புகள் பயின்று முடித்த 290 க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார்.

உயரும் மின்கட்டணம்!

சிக்கலில் தொழில்துறை!

ஆசிரியர்
தி கோவை மெயில்

சமீபத்தில் மின்துறையில் சில மாற்றங்கள் வர உள்ளதாக செய்திகள் வந்துள்ளன. நிலையான மின் கட்டணம், யூனிட் கட்டணம், பீக்ஹவர் மாற்றம், ஆண்டு கட்டணம், டிரான்ஸ்மிஷன் கட்டணம், வீலிங் கட்டணம், இதர கட்டணங்கள் ஆகியவை உயர்த்தப்பட உள்ளன என்ற தகவல் வெளியாகி உள்ளது.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம், மற்றும் மாநிலத்தின் எஸ்.எல்.டி.சி நிறுவனம் ஆகியவை இதற்கான விவரங்களை தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் அளித்துள்ளன.

இது குறித்த விவரங்கள் வெளியானவுடன் தொழில் துறையினருக்கு இது பெரும் சிரமத்தை உருவாக்கும் என்ற கருத்து எழுந்துள்ளது. குறிப்பாக சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு இது சிக்கலை உருவாக்கும் என்று கூறப்படுகிறது. மின்கட்டண உயர்வு போன்றவை போக, முதல் முறையாக தமிழ்நாட்டில் 8 மணி நேரம் தாழ்வழுத்த தொழிற்சாலை மின் நுகர்வோருக்கு அதாவது காலை 6:30 மணி முதல் 10.30 மணி வரை, மாலை 6 மணியில் இருந்து இரவு10 மணி வரை செயல்படுத்தவும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

பல்லாண்டு காலமாக தொழிற்சாலைகள் ஒருவகையான ஷிப்டு முறை அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. தற்போதைய பீக்ஹவர் முறை மாற்றத்திற்கு ஏற்ப நேரத்தை மாற்றினால் தொழிலாளர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினர் சிரமத்துக்கு உள்ளாவார்கள். பணிபுரிவதில் அவர்களின் ஈடுபாடு குறையும். ஏற்கனவே ஆள் பற்றாக்குறையாலும், திறன்மிகு தொழிலாளர்கள் பற்றாக்குறையாலும் சிறு தொழில்கள் பெரும் சிக்கலை சந்தித்து வருகின்றன. அப்படியே நேரம் மாற்றுவது சாத்தியம் இல்லாமல், வழியில்லாமல் வழக்கம்போல செயல்பட்டால் கண்டிப்பாக கூடுதலாக நிதிச்சுமை ஏற்படும். அந்த சுமை சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களால் தாங்கமுடியாத அளவு இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

அதைப்போலவே 6% அல்லது நுகர்வோருக்கான விலை குறியீடு மூலம் பெறப்படும் மதிப்பு இவற்றில் எது குறைவோ அதன் அடிப்படையில் ஆண்டுதோறும் மின் கட்டணத்தை உயர்த்தவும் ஒரு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இது கண்டிப்பாக சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு மிகுந்த சிக்கலையும், கூடுதல் நிதிச் சுமையை ஏற்படுத்தும் அபாயம் உள்ளதாக தொழில்துறையினர் கூறுகிறார்கள்.

ஏற்கனவே தமிழ்நாட்டிலுள்ள பல தொழிற்சாலைகள் தங்களுக்கு தேவையான மூலப்பொருட்களை வெளிமாநிலங்கள் அல்லது வெளிநாடுகளில் இருந்து கொண்டு வருகின்றனர். அந்த மூலப்பொருட்களை கொண்டு வருகின்ற போக்குவரத்து செலவு கூடுதலாக ஏற்பட்டு உற்பத்தி செலவு அதிகரித்து வருகிறது.

சில மாதங்களுக்கு முன்பு மூலப்பொருள் விலை தாறுமாறாக உயர்ந்து தொழில்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன. இதுபோக ஏற்கனவே கடந்த இரண்டு ஆண்டுகளாக கொரோனா பெருந்தொற்று தொழில் துறையினருக்கு பல்வேறு நெருக்கடிகளை உருவாக்கி இருந்தது. அந்த நெருக்கடிகள் மெல்ல மெல்ல குறையத் தொடங்கி ஓரளவுக்கு நிலைமை சீராகி கொண்டிருக்கும் இந்த சூழ்நிலையில் மின் கட்டண உயர்வு சீரமைப்பு போன்றவை கண்டிப்பாக சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு கூடுதல் சுமையாகி விடும் என்பதில் ஐயமில்லை. எனவே இப்பகுதியில் உள்ள தொழில் அமைப்புகள் ஒன்று கூடி இதை மாற்றியமைக்க வேண்டும் என்று

பல்லாண்டு காலமாக தொழிற்சாலைகள் ஒருவகையான ஷிப்டு முறை அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. தற்போதைய பீக்ஹவர் முறை மாற்றத்திற்கு ஏற்ப நேரத்தை மாற்றினால் தொழிலாளர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினர் சிரமத்துக்கு உள்ளாவார்கள்.

வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதுகுறித்து, இந்த விவரங்களை மாற்றி அமைக்கின்ற வகையில், தங்களுக்கு ஏதுவாக அமையும் என்ற வகையில் தொழில் துறையினர் சில திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும் என்று அரசாங்கத்திடம் எதிர்பார்க்கின்றனர். அரசாங்கமும் தொழில் துறையும் வளரவேண்டும், மின் துறையும் சீராக இயங்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டு இருப்பதால் இதற்கான ஆலோசனைகள் நடைபெற்று வருகின்றன. தொழில் துறையினரும் இந்த ஆலோசனையில் பங்கேற்றிருக்கிறார்கள். அரசு, மின் துறையை சார்ந்த அதிகாரிகள், தொழில் துறையினர் இணைந்து ஆலோசனை நடைபெறும். இந்த பேச்சுவார்த்தை சுமுகமாக நடைபெற்று இதன்மூலம் எட்டப்படும் முடிவுகள் தான் நமது பகுதியின் பொருளாதாரத்திற்கு அடிப்படையாக அமையும் என்பதில் ஐயமில்லை அது நடைபெறும் என்று நம்புவோமாக!

இல்லம்தோறும் தேசியக்கொடி

நாட்டின் 76வது சுதந்திர தினத்தை முன்னிட்டு இல்லம்தோறும் தேசியக்கொடி வழங்கும் திட்டத்தின் கீழ், பொதுமக்கள், வியாபாரிகளுக்கு பாஜக சார்பில் தேசிய மகளிரணி தலைவி, வானதி சீனிவாசன் எம்.எல்.ஏ தேசியக்கொடிகளை வழங்கி வருகிறார். இந்தத் திட்டத்தின் மூலம், வீடுகளில் ஆகஸ்ட் 13ம் தேதி ஏற்றப்படும் கொடி, 15ம் தேதி மாலை 6:00 மணி வரை பறக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதனால் அனைவரும் தேசியக்கொடியை வீடுகளில் ஏற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் கோவை தெற்கு தொகுதி தியாகி குமரன் மார்க்கெட் பகுதியில் சிறு கடைகளுக்கு வானதி சீனிவாசன், நிர்வாகிகளுடன் சென்று தேசியக்கொடியை வழங்கினார்.



கே.எம்.சி.ஹெச். லிவர் இன்ஸ்டிட்யூட்

நடத்தும்

கல்லீரல் பரிசோதனை முகாம்

KMCH
HEALTHCARE EXCELLENCE SINCE 1990

கீழ்கண்ட பிரச்சனைகள் இருந்தால்
இந்த முகாமில் கலந்துகொள்ளலாம்

- நாள்பட்ட கல்லீரல் நோய்
- மஞ்சள் காமாலை
- கல்லீரல் சுருக்கம்
- கல்லீரலில் கொழுப்பு படிதல்
- கல்லீரல் & கணையப் புற்றுநோய்
- கால்கள் & அடிவயிற்றில் வீக்கம்
- குடிப்பழக்கத்தினால் ஏற்பட்ட கல்லீரல் பாதிப்புகள்

நாள் : 10.8.22 - 27.8.22
(ஞாயிறு மற்றும் பொது விடுமுறை நாட்கள் தவிர)

காலை 8 மணி முதல் 10 மணி வரை

கல்லீரல் பரிசோதனைகள்
ஃபைப்ரோஸ்கன் (Fibroscan)
அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் (USG)
ஹெப்படைடிஸ் B & C
இரத்த பரிசோதனைகள்
(CBC, Sodium, Potassium, Urea Creatinine, Blood Glucose Cholesterol, LFT, GGT, INR)

₹1999*/-
*நிபந்தனைகள் பொருந்தும்

இம்முகாமில் கலந்து கொள்ள முன்பதிவு அவசியம் 87549 87509

முகாம் நடைபெறும் இடம்

KMCH
கோவை மெடிக்கல் சென்டர் & ஹாஸ்பிட்டல்
99, அவிநாசி ரோடு கோயமுத்தூர் - 641 014. | Ph : 0422 - 4323 800 - 4000 / 680 3000.
www.kmchhospitals.com

NABH ACCREDITED

MAKING THE IMPOSSIBLE, POSSIBLE

"Ice Cream is fun and a celebration"

- Vanjimuthu Palaniswamy, Managing Director, Boomerang

Anushka Juliet
The Covai Mail

Desserts are always a fantasy to most people. Young or Old, Hot or cold, who does dislike ice creams? Certainly, the name itself tempts everyone to go grab one.

Would any of you miss a chance to experience the best taste at your door-step? Yes, Boomerang has inaugurated its new outlet at Thudiyalur, Coimbatore. Its pleasant and calm ambiance is a welcoming peace for each of you. Not just that but its special varieties of soft serves, milk shakes, ice creams and pastries are sure to amuse you. Celebration without family is regrettable but Boomerang offers the best choice to make your family celebration a pleasant place.

What if you are much exhausted besides having a rainy day? How would you get through it?

Here is a surprising suggestion, one of Boomerang's signature recipes 'Brownie Sizzler' is a perfect choice for refreshing yourself out of all the exhaustion. Scoops of ice creams mounted on a brownie is placed on a hot cast iron sizzler. Ice cream topped with the chocolate sauce, is a perfect combo of hot with cold delight. No doubt that it will drive you into a whole new world.

Soft Serves especially the 'Hot Fudge Nut Sundae' is one of their best served signature products. The tag line "You will come back for more" represents its virtue towards their customer dedication and the type of products they serve.

Let's get into some digging about its history.

The first store of Boomerang was established in the year 1997, at Nehru Stadium Coimbatore. The name boomerang is initially associated with an Australian outlet. On their request for the extension of the brand outlet, Vanjimuthu Palaniswamy, Managing Director, Boomerang decided to carry forward the business.

Initially, having received a good customer base, they decided to fly to Italy to get acquainted with further education on Ice cream production. With the evolving technologies in food science, the need to be updated was indeed their key point. The update also focuses on the fact that quality products are being served with the utmost hygiene.

Celebrating their success by entering into the 24th year, it has launched its new store at Thudiyalur, their 15th outlet. In addition he said, "In the year 2023, we are entering into the Silver Jubilee celebration. In this regard we aim to have established 25 outlets of Boomerang as a note of cheers to our outstanding accomplishment of our products".

Their facility branches apart from serving the retail industry. They are into institution business and Ice cream manufactures providing their supply across the country. Their facilities include top brands like Annapoorna for 20 years, Haribhavanam, Taj, and Residency.

In expansion of their services he stated that they are soon to launch Ice Cream cakes, additionally they have revamped milkshakes. Commenting on their new arrivals he stated that though trends on tastes have evolved, there are a lot of loyal customers who have been engaged with boomerang for more than decades. "We are much glad to fulfill the request of the loyal customers and continue to serve a few classic tastes. We make our best to balance the need between the quality taste and the evolving food techniques", he added.

Further plans for the expansion of the brand in the metro cities like Bangalore, Hyderabad are queued up and measures are being taken. The Expansion of their SOPS across Kochin and other significant cities are underway.

He added, ''Everything is unique and made in-house without any outsource. Ice cream turns to be a fun time and celebration. Hence our motto is to engage the customer with grandparents, parents and relatives making this a family place. We aim not to disappoint any of the customers. On the whole Boomerang represents happiness."

Their customer service for the past 25 years has assured of a real time fulfillment in quality and taste. The same with a betterment will proceed.

> The crucial role comes not in initiating a store, but in maintaining good customer service.



"Strengthen the grass roots for a better growth"

-Harihara Sudhan, National Joint Coordinator & In-charge Puducherry, IYC

Anushka Juliet
The Covai Mail

Hari Hara Sudhan of Coimbatore has been appointed as the National Joint Coordinator & In-charge Puducherry for the Indian Youth Congress (IYC) Media Department. Rahul Rao, National In-charge, Media Department, officially acclaimed the nomination of Hari Hara Sudhan's posting.

Serving the congress party for the past 15 years, Harihara Sudhan has held significant positions in various unions including Student Congress, Indian Youth Congress, INTUC, Congress Seva Dal, Human Rights committee, TN Youth Congress, and Trade Unions as well.

While commenting on the new appointment, Harihara Sudhan said, "This decision was a result of the resolution taken at the Congress Kariya committee (Congress Working Committee CWC) meeting held at Jaipur under the orders of Rahul Gandhi."

The core purpose of the resolution discussed to deliver significant positions to youngsters below the age of 50, aiming to fill in the existing generation gap within the party. In addition, multiple responsibilities handed to the senior individuals will be minimized,

paving way for more youth to participate in the party works.

Being appointed with a significant position, he stated that Congress is the foremost and the oldest party in the country. It is important to strengthen it from its grass root level for a better Nation and Democracy to be established. Under the guidance of Rahul Gandhi, he is said to initiate action plans in bringing more youth towards the party and work for the nation. He added that the party members aren't divergent rather they converge with the ideal goal of making congress leader Rahul Gandhi the next Prime Minister of India.

He mentioned that the Indian population constitutes 65% of the youth and their contribution to the growth of the country is much significant. In regards to this, he stated that it is essential for the young population, right from their studenthood to be aware of the country's history and the Gandhian goals which led to the freedom of India. Now that most of the young world is entirely into the social media era, plans to campaign and create awareness among them will soon be scheduled right after the official oath-taking ceremony.

India is a secular country and its ideal motto "Unity in diversity" should be upheld by every individual of the country irrespective of race, caste or religion and Congress holds utmost responsibility for spreading this harmony across the nation.

It has been reported that Rahul Gandhi along with the party works, has scheduled to organize the "Bharat Jodo Yatra" on 02 October 2022, covering 3500 km from Kashmir to Kanyakumari. Covering about 148 days, an average of 25 km per day, Rahul is said to take up public interaction and their opinions in the due course. The course of action focuses on binding all the congress members for the forthcoming elections in the states of Gujarat, Himachal Pradesh and Karnataka.

RANK NO. 2
BEST FERTILITY & IVF HOSPITAL, COIMBATORE
THE TIMES GROUP

rao hospital

Turning hope into happiness.
Turning patients into parents.



Fertility Services

- IVF
- ICSI
- IUI
- Ovulation induction
- Recurrent Pregnancy Loss
- Male infertility
- Egg freezing
- Embryo freezing
- Fertility enhancing Laparoscopy & Hysteroscopy surgery
- Surrogacy
- 3D/4D Ultrasound scan

OTHER SPECIALITIES
Birthing | Gynaecology | Surgery | Paediatrics | Imaging & Lab

120, West Periyaswamy Road, R.S. Puram, Coimbatore - 641 002.
Ph: 0422-4048888 | 96299 19191 www.raohospital.com | care@raohospital.com

To Advertise in
THE COVAI MAIL
84898 12341
84895 12341
covaimailads@gmail.com
report2tcm@gmail.com

THE COVAI MAIL

Disclaimer: The readers are advised to check with the authenticity of the organisations that are advertising in our newspaper before taking action in any way. The Owner and Publisher of this newspaper are not in any way responsible for the genuineness of the advertisements / advertisers and their products and services. If anybody suffers a loss or damage because of the advertisements published in this newspaper, then the owner, publisher, printer, editor and employees can be responsible under no circumstance as stated earlier.

Rotary Club Kovaipudur pivots Maternal Health

Recently, Rotary Club Kovaipudur organized the distribution of nutritional supplements to 50 expectant mothers at Sundakkamuthur Government hospital. Dr Chithra, Chief Medical Officer presided over the event, wherein Rtn. S.A. Ganesan, President, Rtn. Dr. M.H. Muhammad Ilyas, Secretary, Rtn. Dr Savitri, Chair, Community Service - Medical, Rtn. N. Srinivasan, Co-chair, other club members and hospital staff were part of the event.

Reg. No. TNBIL/2014/55455. Postal Registration No: CB/123/2021-23. Owned, Published and Printed by K.C.Srinivasan and published from 5/1, Athanur Amman Kovil Street, Ganapathy, Coimbatore - 641006 and Printed at Sri Saraswathy Printers, 5/1, Athanur Amman Kovil Street, Ganapathy, Coimbatore - 641006. Editor: K.C.Srinivasan